மலர் : 19
இதழ் : 10

# அடித்தளம்

அன்பியங்களின் தொடர்பிதழ்

குழித்துறை மறைமாவட்டம்

நவம்பர் 2024

தனிச்சுற்றுக்கு மட்டும்

## மனிதத்தில் புனிதம் காண...



## இயக்குநரிடமிருந்து......

இறைவன் படைப்பில் உயர்ந்தபடைப்பு மனிதன். அதிலும் சிறப்பம்சம் மனிதனுக்கு இறைவன் கொடுத்த ஆறறிவு. இத்தனை அரிய தொருகொடையாம் அறிவை ஆணவம் என்ற அழுக்கால் மறைத்து வாழ்கிறான் மனிதன்.

வாடிய பயிரைக் கண்டபொழுதெல்லாம் வாடினேன் என்கிறார் – வள்ளலார். ஒருவன் தன் மனதை தூய்மையின் ஆலயமாய், இரக்கம் நிறைந்த உள்ளத்தினராய், தெளிவான சிந்தனையை அணிகலனாய், இழிவான எண்ணங்களையும் செயல்களையும் புறக்கணிப்பவராய் தன்னைப்போல் பிறரையும் மதிக்கக்கூடியவராக வாழ்பவரே முழுமனிதனாக முடியும்.

படைப்பின் கைவண்ணத்தில் சிற்பியான இறைவா
களிமண்ணால் தன் நிகரில் வடிவமைத்து
தாயின் கருவறையில் கருவாக்கி
மழலையாய் உலகைக் கண்டுணரச் செய்து
மனிதரின் இயல்பில் சிந்தைதந்து
மனித நேயமாண்புடன் வாழவைத்தாய்.

மனிதனாய் வாழவரம் பெற்ற என்னை
மாமனிதனாய் உயரச் செய்தாய்
வாழும் போது சான்றோர் புகழ்ந்தனர்
மடிந்தபின்னும் வையத்தார் போற்றினர்
மாந்தரில் நான் புனிதம் அடைந்தேன்.

கண்ணால் காணும் சக மனிதரை நேசியாமல் கண்ணுக்குப் புலப்படாத கடவுளைத் தேடி அலைந்து என்ன பயன்? இறைவன் மேல் அன்புகொண்டு நம்பிக்கை கொண்டு, இறைவனின் கோட்பாடுகளை நெறி முறையாகக் கொண்டு மனித நேயத்தோடு, இப்பூமியில் வாழ்ந்துவந்தால் மட்டுமே மனித நிலையிருந்து புனித நிலையை அடைய முயலும்.

மனிதனாய் மனித நேயத்துடன் வாழ்வோம். மனிதமும் புனிதமும் நம் அன்பியங்களின் அடித்தளமாகட்டும். மனிதத்தில் இறைவனை பிரதிபலித்து புனிதராய் நிறைவடைவோம் என்று மனமார வாழ்த்துகிறேன்.

பணி தோழமையில்

அருட்பணி **M. ஆல்வின் விஜய்**
இயக்குநர், அன்பிய பணிக்குழு

1
வாரம்

# புனித வாழ்க்கை வாழ அழைக்கும் அன்பியம்

அருட்பணி. R. பால் ரிச்சர்ட் ஜோசப்
அதிபர், புனித தேவசகாயம் திருத்தலம்
நட்டாலம்.

நீதி, நேர்மை இதயத்தில் இருந்தால் நடத்தையில் அழகு இருக்கும் நடத்தையில் அழகு இருந்தால் குடும்பத்தில் ஒருமைப்பாடு இருக்கும் குடும்பத்தில் ஒருமைப்பாடு இருந்தால் சமூகத்தில் ஒழுக்கம் வாழும் சமூகத்தில் ஒழுக்கம் வாழ்ந்தால் உலகத்தில் அமைதி நிலவும்.

இறைவனின் அருளை வரமாகப் பெற்று கொடையாக பிறருக்கு கொடுக்கும் வாழ்வே, புனித வாழ்வு. காலத்தை அறிந்து கணக்கில் வைத்து வாழ்பவன் அறிவாளி. காலம் கடந்தும் மனிதம் வாழ தன்னை அர்ப்பணிப்பவனே புனிதன், சந்தன மரம் போல ஆதி திருஅவை பிரதிபலிக்கக்கூடிய பண்புகளை, தன்மைகளை அன்பியங்கள் வழியாக நாம் பெறுகின்ற போது நன்மைகளால் தீமைகளை வெல்லலாம். அன்பியத்தின் வழியாக மனித மாண்பின் புனிதத்தை பாரெங்கும் பறைசாற்றலாம். திருத்தூதர்களின் வாழ்வையும், பணியையும், நம்பிக்கைக் கொண்டோரின் உடனிருப்பையும், ஒத்துழைப்பையும் ஆதி திருஅவை நமக்கு உணார்த்துவது போல நம் வாழ்வும் எப்படி அமைய வேண்டும் என்பதை புனிதர்களுடைய வாழ்வு நமக்கு உணர்த்துகின்றது.

குழந்தை இயேசுவின் புனித திரேசாள் போல சின்ன சின்ன செயல்களில் புனிதத்தோடு வாழலாம். நமது மண்ணின் மறைசாட்சி தேவசகாயம் போல பாகுபாடு அற்ற சமூகம் அமைய அர்ப்பணிப்பதில் புனிதத்தைக் காணலாம். புனித ஜாண் மரிய வியான்னியைப்போல எளிய நடத்தை, உரையாடல், ஒப்புரவு நிகழ்வுகள் வழியாக புனிதம் பேணலாம். புனித ஆக்கா ரொமேரோ போல ஒடுக்கப்பட்ட மனிதர்களுடைய விடுதலைக்காய் தன்னை அர்ப்பணிப்பதில் புனித வாழ்க்கை வாழலாம். நற்செய்தியை பறைசாற்றிய புனித சவேரியாரின் மறைபரப்புப் பணியால் புனிதத்தைப் பெறலாம். இம்மண் பல புனிதர்களை உருவாக்கிய மண். இவர்கள் வழியாக நாம் இவ்வுலகில் சமூக ஏற்றங்களையும், மாண்பையும் கண்டோம் என்பது தான் வரலாற்று உண்மை. ஆகவே புனித வாழ்வுக்கு நம் சமூகமும் ஒரு சாட்சி. ஆகவே தான், நன்றி உணர்வோடு அன்பியத்தில் புனிதம் பற்றி உரையாடுகின்றோம். அக்கம் பக்கம் வாழும் மக்களோடு இணைந்து நம் அன்பியத்தையும், பணிகளையும் இறை ஒளியில் ஆய்வுசெய்வோம் தீர்வு காண்போம்.

அன்பியத்தின் நோக்கம், அன்பியத்தின் தேவை, அன்பியத்தின் இலட்சியம், அன்பியத்தின் தன்மை, அன்பியத்தின் செயல்பாடு யாவுமே இறையாட்சி ஒளியில் புனிதத்திற்கு வழிகாட்டுகிறது.

ஏற்றத்தாழ்வற்ற வாழ்வே புனித நிலைக்கு அழைப்பு விடுக்கிறது. புனித வாழ்க்கை வாழ்வதற்கான வழிமுறைகளைக் கொடுப்பதே அன்பியம். அன்பை ஆயுதமாகவும், பண்பைப் படைக்கலனாகவும் கொண்டு, பகிர்வை, பகிர்வுக்குரியவர்களைத் தேடிச்சென்றுப் பேணிக் காப்பதே அன்பியம். அன்பியத்தில் இறைவார்த்தைப் பகிர்வதால் இறையன்பை உணர முடிகிறது. அன்பியத்தில் சமூகத்தின் அவலங்களை அலசுவதாலும், பிரச்சினைகளைத் திறனாய்வுச் செய்வதாலும், ஏழைகளை இனங்கண்டு தேவைகளைக் கண்டுணர்வதாலும், இறையாட்சியின் பாதையில் செல்கிறோம். புனிதத்தைக் கண்டடைகிறோம், “ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்” என வேதாந்தம் கூறுவதை விட, ஏழைகளைச் சிரிக்க வைப்பதில், சிந்திக்க வைப்பதில் புனித வாழ்க்கை வாழ அழைக்கிறது அன்பியம்.

## சிந்திக்க

1. ஏழைகளைப் பார்த்துச் சிரிக்கிறோமா அல்லது சிரிக்க வைக்கிறோமா ?
2. நமது அன்பியம் புனித வாழ்க்கைக்கு அழைப்பு விடுக்கிறதா ?

2
வாரம்

# விண்ணக வீட்டில் பேரின்பம் பெற......

அருட்பணி. R.ஐசக் ராஜ்
பேராலய அதிபர், திருத்துவபுரம்.

இம்மண்ணுலகில் பிறந்து வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் இறப்பை நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறோம். இறப்போடு இவ்வுலக வாழ்க்கைப் பயணம் முடிந்துவிடும். நமது முடிவு எங்கே ? எப்படி ? எப்போது ? என்பதனை யாருக்கும் தெரியாதபடி கடவுள் மறைபொருளாகவே வைத்துள்ளார். இந்த நாள் திடீரென வரும் என்பதனை கீழ்காணும் விவிலியப் பகுதிகள் மிகத் தெளிவாக நமக்கு விளக்குகின்றன.

1. மத்தேயு 25 : 1-13 (பத்து தோழியர் உவமை)
2. லூக்கா 12 : 35-40 (விழிப்பாயிருக்கும் பணியாளர்கள்)
3. லூக்கா 12 : 34-36 (மானிடமகன் வரும் நாள்)

இம்மண்ணக வாழ்க்கைப் பயணத்துக்கு முடிவொன்று உண்டு. அது விண்ணகப் பிறப்பு. அது நிலையானது, முடிவில்லாதது. "நமக்கோ விண்ணகமே தாய் நாடு" (பிலிப். 3: 20) என்கிறார் புனித பவுல். "இறந்தோர் எல்லாரும் உயிர்த்தெழுவர், காலம் வருகிறது. அப்போது கல்லறைகளில் உள்ளோர் அனைவரும் அவரது குரலைக்கேட்டு வெளியே வருவர், நல்லன செய்வோர் வாழ்வு பெற உயிர்த்தெழுவர்" என இக்கருத்தை நற்செய்தியாளர் குறிப்பிடுகிறார். (யோவான் 5 : 28-29).

உங்கள் இறப்புக்குப் பிறகு கடவுள் தரும் நிலைவாழ்வு உங்களுக்கு எப்படி அமைய வேண்டும் என விரும்புகிறீர்கள் ?



கடவுளிடமிருந்து ஆசியா ? தண்டனைத்தீர்ப்பா ?

ஆசி பெற இதுவரை நீங்கள் செய்தது என்ன ?

**லூக்கா 16 : 19-21**

செல்வரும் லாசரும் உவமையில் தீமையைச் செய்யவில்லை. நன்மை செய்ய வாய்ப்பும் வசதியும் இருந்தும் செய்யவில்லை. அதுவே, அவரைப் பாதாளத்தில் தள்ளியது.

**லூக்கா 12 : 16-21**

அறிவற்ற செல்வன் உவமையில் அதிகமாய் விளைந்த விளைபொருட்களைப் பிறருக்குப் பகிராமல் தன் களஞ்சியத்தை இடித்து இன்னும் பெரிதாகக் கட்டத் திட்டமிடுகிறான். பாவம், அனுபவிக்க முடியவில்லை. இம்மண்ணுலகில் செல்வம் சேர்ப்பது காற்றைப் பிடிப்பதற்கு சமமே.

**ஆண்டவரின் ஆசி பெற என்ன செய்யலாம் ?**

1. அளவுக்கதிகமாக செல்வம் சேர்க்கும் வெறித்தனத்தை விரட்டலாம்.
2. நமது உடமைகள் மேலுள்ள பற்றினைக் களையப் பயிற்சிக்கலாம்.
3. பாக பிரிவினையின் போது எழும் உறவு முறிவைத் தவிர்க்க பிடிவாதத்தைத் தளர்த்தி பெருந்தன்மையோடு நடந்து கொள்ளலாம்.
4. பாதைகள் உருவாக எழும் மோதல்களில் பக்குவமாய் நடந்து கொள்ளலாம்.
5. நிலபுலன்கள் பொருட்டு ஏற்படும் வழக்குகளை சுமூக பேச்சு வார்த்தைமூலம் முடிவுக்குக் கொண்டு வரலாம்.
6. சொத்துச் சேர்ப்பதன் மூலம் ஏற்படும் பிரிவினைகளைத் தடுக்கலாம்.
7. ஏழை மாணவரைத் தத்தெடுத்து கல்விக் கட்டணம், பாடநூல்கள், சீருடை வாங்கிக் கொடுக்கலாம்.

8. குடும்ப சிறப்பு நிகழ்வுகளின் போது காப்பகங்களுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் உணவு வழங்கலாம்.



9. மாதந்தோறும் நமது வருமானத்தில் ஒரு சிறு தொகையை ஒதுக்கி ஏழைகளுக்கும், பிறரன்பு மற்றும் ஆன்மீகப் பணிகளுக்கும் உதவலாம்.
10. நமது உடைமைகளைக் கொண்டு ஏதாவது ஒரு விதத்தில் நன்மைகள் செய்து புண்ணியம் சேர்க்கலாம்.
11. இவ்வாறு நாம் இருப்பதை இழந்து கடவுளின் கைம்மாறுப் பெற்று விண்ணக வீட்டில் பேரின்பம் பெறலாம்.

**சிந்திக்க**

1. ஆண்டவரின் ஆசி பெற நீங்கள் செய்து கொண்டிருப்பவை யாவை ?
2. நாம் கடவுளுக்குரிய பிள்ளைகள் என்பதில் விழிப்பாயிருக்கிறோமா ?

## 3 வாரம்

## பேணிக்காக்கும் பேரரசர் கிறிஸ்து

அருட்பணி. M. டைட்டஸ் மோகன்

***மனிதர்களை பேணிக்காக்கும் கலாச்சாரத்தை, குறிப்பாக விளிம்புகளில் வாழ்வோரை பேணிக்காக்கும் கலாச்சாரத்தை, நாம் மீண்டும் கண்டு கொள்ளுவதன் வழியே உண்மையான மாற்றங்களை இவ்வலகில் உருவாக்க முடியும்".***

- திருத்தந்தை. பிரான்சிஸ்

பணம், பதவி, புகழ் என ஆணவப்போக்காலும், அதிகாரத்திமிராலும் ஆட்சி செய்து மக்களை வதைத்து வீழ்ந்த சாம்ராஜ்யங்களை நமக்குத் தெரியும். அன்பும், அக்கறையும், நீதியும், நேர்மையும் கொண்டு மக்களை மதித்து வளர்ந்த அரியாசனங்களின் ஆட்சிதனையும் தெரியும். "மன்னா !" ரொட்டித் துண்டு கூட கிடைக்கவில்லையே. எங்கள் பசியைப் போக்க ஏதாவது வழி செய்யுங்கள். கண்ணீரோடு வீதிகளில் கதறிய மக்களைப் பார்த்து, ரொட்டித்துண்டுக் கிடைக்காவிட்டால் என்ன ? கேக் வாங்கி சாப்பிட வேண்டியது தானே என்று நக்கலடித்த பதினாறாம் லூயிஸ் ஆட்சியின் வாரிசுகளை இன்றும் பல விதங்களில் காண்கிறோம். இவர்கள் வீழ்வது நிச்சயம் என்பதற்கான சமீபத்திய உதாரணம் அண்டை நாடான இலங்கை.

2022- ஆம் ஆண்டு கடுமையான பொருளாதார நெருக்கடியை சந்தித்த மக்கள் ராஜபக்சே வகையறாக்களை இன்று நாட்டிலிருந்து துடைத்தெறிந்துள்ளார்கள். இந்தியா போன்ற சனநாயக நாட்டில் மக்கள் தான் எசமானர்கள், தலைமைப் பொறுப்பைத் தருபவர்கள். எனவே, பணிப்பொறுப்பு ஒருவருக்கு தரப்படுவது மக்கள் பணியாற்றவே. குறிப்பாக, நலிந்தவர் வாழ்வு நலம் பெறச் செய்வதே நல்ல தலைமைக்கு அழகு. பேணிக்காத்தல் தலைமையின் கடமை. நல்ல திட்டங்கள், செயல்பாடுகள் வழியாக மட்டுமே நல்லரசுகள் மக்களைப் பேணிக்காக்கும். வாய்ச்சவுடால்கள் நீடித்து நிலைக்காது. மக்களைப் பேணிகாக்கும் விதமாய் இன்றைய அரசுகள் உள்ளனவா ? சாமானியரையும் காக்கும் ரீதியில் அரசு திட்டங்களில் எவையெல்லாம் முன்னுரிமை பெறுகின்றன ? என விவாதம் செய்வோம்.

**எதார்த்தம் அலசுவோம்**

"ஆகஸ்ஃபாம் - குளோபல் ரிச்" நிறுவனங்களின் பொருளாதார அறிக்கைச் சொல்கிறது, "உலகின் மிகப்பெரிய பணக்காரர்கள் 85 பேரின் செல்வமும் ஒட்டுமொத்த மக்கள் தொகையில்

ஏழைகள் பாதி பேரின் செல்வமும் சமம். இந்தியாவில் 100 கோடிக்கு மேல் சொத்து வைத்திருப்பவர்கள் 11 பேரின் சொத்து மதிப்பு மட்டும் ரூ. 2.02 லட்சம் கோடி". அதே வேளையில் ஜர்னல் ஆ.ஃப் குளோபல் ஆன்காலஜி மருத்து ஆய்வறிக்கைப்படி. இந்தியாவில் புற்றுநோய்க்கு ஒவ்வொரு நாளும் 50 குழந்தைகள் பலியாகின்றனர். இவ்வெண்ணிக்கை 2025 -களில் ஐந்து மடங்காக அதிகரிக்கும். இதற்கான முதன்மை காரணமாக இவ்வறிக்கை சுட்டிக்காட்டுவது, ஒரு சராசரி இந்திய குடும்பம் தன் ஆண்டு வருமானத்தை விட இருபது மடங்கு அதிகமாக மருத்துவத்திற்கு செலவிட வேண்டியிருப்பதாலேயே பலர் சிகிட்சைக்கு செல்ல முடியவில்லை. பேணிக்காக்கும் அரசெனில் இதுக்குறித்து கவலை கொள்வதோடு அவசர செயல்திட்டங்களை முன்னெடுக்கும். கல்வி, மருத்துவம் போன்ற அடிப்படை தேவைகளை முற்றிலும் இலவசமாக்கும். இங்கு நடப்பதென்ன ?

மக்களின் வாழ்வாதாரங்களைப் பேணிக்காக்க வேண்டிய அரசே பெருமுதலாளிகளின் கைக்கூலியாக மாறிப்போவதை கண்டுகொள்ளாமல் கடப்பது நியாயமா? ஒன்றிய அரசின் அணுக்கனிமப் படிவுகள் எடுப்பதற்கான அணுக்கனிமச் சுரங்கத்திட்டம் குமரி மக்களாகிய நம்மைச் சவக்குழியில் புதைக்கும் திட்டம் என்பதனை அறிந்துள்ளோமா ? தெரிந்தும் மௌனம் சாதிப்பது நியாயமா ? புற்று நோய்க்கு இனியும் எத்தனை உயிர்களை காவுக்கொடுக்கப் போகிறோம் ? இனியாவது இலவச லயிப்புகளிலிருந்துக் கடந்து வருவோம். நாற்காலிச் சண்டைகளை நம்மிடமிருந்து அகற்றுவோம்.

**நம் நலன்(ம்) பேணுவோம்**

இன்று ஆள்பவர்களிடம் மண்ணை, மக்களை பேணிக்காக்க எத்தகு அணுகுமுறையும், திட்டங்களும் இருக்கிறது? என்கிற தெளிவு பெறுதல் நம் முதல் கடமை. இரண்டாவது, பேணிக்காப்பதற்குப் பதிலாக மக்களை சாதி, மத, இன பேரங்களால் கூறுபோட்டு தங்களது பதவி சுகங்களை தக்கவைக்கும் சுயநலவாதிகளை எதிர்ப்பது நமது முதன்மைக் கடமை. இவையே நம்மைப் பேணிகாக்கும் பேரரசர் இயேசு நம்மிடம் எதிர்பார்ப்பது. ஆவர் ஆடுகள் வாழ்வு பெற வந்தவர் (யோவான் : 10). நல்லாயன் குரலுக்கு செவிமடுக்கும் மந்தைகள் நாமெனில் தன்நலனோடு மற்றவர் நலனையும் நாடுவோம்.

"மற்றவர்களின் நலனைத் தேடி அவர்களின் மகிழ்ச்சியை நாடுகின்றவர்கள் தான் உண்மையான நற்செய்தியாளர். சுவர்களைத் தகர்த்தெறிந்து நமது இதயம் முகங்களாலும், பெயர்களாலும் நிறைந்திருக்கும் போது நாம் நிறைவை அடைகிறோம்". (நற்செய்தியின் மகிழ்ச்சி எண். 274). இனி நம்மில் யாரும் நாற்காலிகளுக்காக அலையத் தேவையில்லை நாமே நாற்காலிகள் செய்யும் தச்சனாக மாறிடுவோம் இயேசுவைப் போல .... ! பக்கத்து "சீட்" கேட்ட சீடர்கள் அறியவில்லை பாடுபடும் சிலுவையே பரிசுத்த சிம்மாசனம் என்று.



**சிந்திக்க**

1. நமது அன்பியங்கிளில் அரசியல் செய்திகளை அலசுகிறோமா ?
2. பிறர் நலம் பேணுகிறோமா ?

சிந்திப்போம்...

4
வாரம்

## யூபிலி 2025

அருட்பணி. N.மார்டின்
பணிக்குழுக்களின் ஒருங்கிணைப்பாளர்

"யூபிலி" என்ற வார்த்தையைக் கேட்டவுடனே, கி.பி. 2000 ஆண்டை யூபிலி ஆண்டாக மிகவும் விமரிசையாக கொண்டாடியது தான் நம் நினைவில் வந்து போகிறது. அது மக்கள் மனதிலேயேப் பதிந்த ஒன்று. விழிப்புணர்வு, சமத்துவம், பகிர்வு என அனைத்தும் சமூகத்திலேயேப் பூத்துக் குலுங்கியது. 2 ம் வத்திக்கான் சங்கத்தின் சாதனையாக, இந்திய அளவில் தமிழகத்திலேயே 25 பெண் வேதியர்கள் நியமிக்கப்பட்டார்கள். இறைமக்கள் பேரவை 2000 என எத்தனை மாற்றங்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டன.

"யூபிலி" என்றால் நாம் கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருப்பது. பணியில், சாதனையில், திருமண வாழ்வில், பிறந்த வயதில், பணிவாழ்வில் என 25 வருட சாதனைகளை, பயணத்தை, பயணத்தின் முழுமையை, நிறைவாகக் கொண்டாடுவதாகும். "யூபிலி" எதற்காக என்பதை பல இடங்களில், பல தளங்களில், அருள் தந்தையர்கள் தெளிவாக விளக்கிக் கூறுவர்.

இயேசு கிறிஸதுவின் 2025 வது பிறப்பு விழா தான் இந்த யூபிலி ஆண்டு. யூபிலி ஆண்டை வரலாற்றில் "புனித ஆண்டு" எனக் குறிப்பிடப்படுகிறது. நாம் இதை, செயல் வடிவங்களைப் புதுப்பிக்கும் ஆண்டாகக் கொள்ளலாம். வரலாற்றிலே 100 ஆண்டுகளுக்கு, 50 ஆண்டுகளுக்கு ஒருமுறை என்று கொண்டாடப்பட்ட யூபிலி ஆண்டை கி.பி. 1470 வது ஆண்டு முதல் திருத்தந்தை இரண்டாம் பவுல் அவர்கள் 25 ஆண்டுகளுக்கு ஒரு முறைக் கொண்டாடும் படிச் செய்தார்.

நமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வரும் ஆண்டை யூபிலி ஆண்டாக அறிவித்ததோடு அதன் மையப்பொருளாக "எதிர்நோக்கின் திருப்பயணிகள்" (Pilgrims of Hope) எனவும் அறிவித்துள்ளார். ஏதோ ஒன்றிற்காக காத்திருப்பது எதிர்பார்ப்பு ஆகும். இது பல வேளைகளில் ஏமாற்றத்தையேத் தருகிறது. ஒன்றை அடைவதற்காகவே முயற்சியோடுக் காத்திருத்தல் அல்லது பயணித்தல் எதிர்நோக்கு ஆகும். ஆனால், எதிர்நோக்கு ஒருபோதும் ஏமாற்றத்தைத் தராது (Spes Non Confundit).

உரோமை நகரில் புனித பேதுரு ஆலயத்தின் யூபிலிக் கதவுகள் 2024 டிசம்பர் 24-ஆம் நாளன்றுத் திறக்கப்படும். ஓராண்டு முழுவதும் யூபிலி கதவுகள் திறந்திருக்கும். 2024 டிசம்பர் 29 ஆம் தேதி ஒவ்வொரு மறைமாவட்ட பேராலயத்திலும் ஆயரின் தலைமையில் திருப்பலி நிறைவேற்றி யூபிலியை சிறப்பாகக் கொண்டாடுவர். யூபிலி ஆண்டு நிறைவுறும் நாள் 2025 டிசம்பர் 28.

இந்த யூபிலி ஆண்டில் கடந்து வந்த பாதைகளைத் திரும்பி, திருப்பிப் பார்த்து நன்றிச் சொல்வோம் (Review). ஒரு நாளை, ஒரு மாதத்தை, ஓராண்டைத்திருப்பிப் பார்ப்பது சாதாரணம். ஆனால், 25 வருடங்களைத் திருப்பிப் பார்ப்பது என்பது அசாதாரணம். திருப்பிப் பார்ப்போம். நம் சாதனைகளைக் கண்டுபிடித்துச் சரித்திரமாக்குவோம். 25 வருடங்கள் என்றால் கால் நூற்றாண்டு. என்னே வியப்பு ! நாம் செய்த விந்தைமிகு செயல்களை வகைப்படுத்துவோம். மீண்டும் உற்சாகத்தோடு புதிதாக ஆரம்பிப்போம் (Restore). ஆன்மீகத்தை நம்மில் ஏற்று ஆன்ம நேயத்தை பிறரிடம் காட்டுவோம். அடுத்திருப்பவர் மீது அன்புக் காட்டுவதோடு நின்று விடாமல் அடுத்திருப்போரை இணைத்து விடுதலை வாழ்வுக்காக அயலானோடும் அடுத்திருப்போரிடமும், இறைவனோடும், பலம் மிக்கவரோடும், பலம் இழந்தவரோடும் இணைவோம் (Reconcile).

இந்த யூபிலி அடுத்துவரும் யூபிலிக்கு வழிகாட்டட்டும். மாண்பின்றி நிற்போரை மதித்து அடையாளம் காட்டுவோம். போதைகளுக்கு அடிமைப்பட்டு கோவிலேயே இன்பம் காண்போரின் வாழ்க்கைக்கு சுக்கானாக இஐந்து எதிர்நோக்குக்கு வழிகாட்டுவோம். சிதைந்து புலம் பெயர்ந்தவர்கள், தனிமையில் வாடும் முதியவர்களுக்கு அடையாளமாவோம்.

எதிர்நோக்கி இருப்பதில் மகிழ்ச்சிக் கொள்ளுங்கள் என்கிறார் பவுல் அடிகளார். அரசின், சமுதாயத்தின் விடியலுக்காய் எதிர்நோக்கியிருப்போம். காரணம், எதிர்நோக்கு ஒருபோதும் ஏமாற்றம் தராது. நாம் எதிர்நோக்கின் திருப்பயணிகளாவோம்.

**சிந்திக்க**

1. நமது அன்பியத்தின் எதிர்நோக்குகள் எவை எவை ?
2. நீங்கள் கேட்டறிந்த யூபிலி ஆண்டின் விளக்கங்கள் எவை எவை ?

## மருத்துவ உலகம் – நீரிழிவு நோய்

டைப் 2 நீரிழிவு பிரச்சினை உள்ளவர்களுக்கான டயட் இதோ .... என்ன சாப்பிடலாம் ..... என்ன கூடாது ....

ஒருவர் உடலில் இரத்த சர்க்கரையைக் குறைக்க வேண்டும் எனில் முதலில் நம் உணவிற்கு நாம் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். நீரிழிவு நோய் உள்ளவர்கள் அதைக் குறைக்க முடியாமல் கஷ்டப்படுகின்றனர். ஒரு ஆரோக்கியமான உணவை எடுத்துக் கொள்வதன் மூலம் உங்கள் உடலில் சர்க்கரை அளவைக் குறைக்க முடியும். இப்போது நீங்கள் நீரிழிவு நோயாளிகள் எந்த வகையான உணவுகளை சேர்த்துக் கொள்ளலாம் மற்றும் எந்த உணவுகளை சேர்த்துக் கொள்ளக் கூடாது என்பதில் குழப்பத்தில் இருக்கலாம். அதற்கு இந்த கட்டுரை உங்களுக்கு உதவும். நீரிழிவு நோயாளிகளுக்கு நன்மை பயக்கும் உணவுகள் மற்றும் தீமை ஏற்படுத்தும் உணவுகள் இரண்டும் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

இரத்த சர்க்கரை அளவை கட்டுக்குள் வைக்க டைப் 2 நீரிழிவு உள்ளவர்கள் சாப்பிட வேண்டிய உணவுகள் (Allowed foods)

முதலில் நமக்கு எந்த வகையான உடல்நல கோளாறு ஏற்பட்டாலும் நாம் அந்த நேரத்தில் சத்தான உணவுகளை எடுத்துக் கொள்வது முக்கியமாகும். ஏனெனில், இந்த சமயத்தில் நமது உடலானது நோயுடன் போராடுவதால் சத்துக்களை இழக்கிறது. எனவே, உங்கள் தட்டில் ஆரோக்கிய கொழுப்புகள் மற்றும் நார்சத்து நிறைந்த உணவுகள் இருக்க வேண்டும், இந்த உணவுகள் உங்கள் வயிறை நீண்ட நேரத்திற்கு திருப்தியாக வைத்திருக்கும். டைப் 2 வகை நீரிழிவு நோயாளிகளுக்கு உதவும் சில உணவுகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.



பழங்கள் - ஆப்பிள், ஆரஞ்சு, பெர்ரி, முலாம்பழம், பேரீச்சை பழம், பீச் பழங்கள்

காய்கறிகள் - ப்ராக்கோலி, காலி.ஃ.பிளவர், கீரை, வெள்ளரி

முழுதானியங்கள் - ஓட்ஸ், பழுப்பு அரிசி, தினை

நட்ஸ் - பாதாம், வால்நட்ஸ், பிஸ்தா

விதைகள் - சியா விதைகள், பூசணி விதைகள் மற்றும் ஆளி விதைகள்

புரதம் நிறைந்த உணவுகள் - முட்டை, மீன் மற்றும் கோழி இறைச்சி



### இதயத்திற்கு ஆரோக்கியமான கொழுப்புகள் கொண்ட எண்ணெய்கள்

ஆலிவ் எண்ணெய், நல்லெண்ணெய், இந்த உணவுகள் அனைத்தும் நோயாளிகளுக்கு நன்மை பயக்கக்கூடிய உணவுகளாக உள்ளன. இவையெல்லாம் நமது உணவுகளில் கண்டிப்பாக சேர்த்துக் கொள்ள வேண்டியவை.

### தீங்கு ஏற்படுத்தும் உணவுகள் (Avoid foods)

முக்கியமாக நாம் எண்ணெய் உணவுகள், குளிர் பானங்கள், செயற்கை இனிப்பு உணவுகள் ஆகியவற்றை உண்ணும்போது நமக்கு டைப் 2 நீரிழிவு நோய் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கின்றன. ஆனால் எந்த உணவுகளை எல்லாம் நாம் உணவில் சேர்த்துக்கொள்ள கூடாது என நாம் அறிந்து கொள்ள வேண்டியதும் முக்கியமாகும். எனவே, அவற்றை இப்போது பார்ப்போம்.

கொழுப்பு இறைச்சிகள் - ஆட்டு இறைச்சி, விலங்கு இறைச்சிகள்.

பால் - முழு கொழுப்புள்ள பால், வெண்ணெய் மற்றும் சீஸ் (பாலாடைக்கட்டி).

இனிப்புத் தயாரிப்புகள் - மிட்டாய். பிஸ்கட்டுகள். ஐஸ்கிரீம். இனிப்பு பானங்கள் மற்றும் இனிப்பு பலகாரங்கள்

இனிப்புகள் - வெள்ளை சர்க்கரை, பழுப்பு சர்க்கரை, தேன் மற்றும் மேப்பின் சிரப்.

பதப்படுத்தப்பட்ட உணவுகள் - சிப்ஸ், பாப்கார்ன், பதப்படுத்தப்பட்ட இறைச்சிகள்.

இவை அனைத்தும் நீரிழிவு நோயாளிகளுக்கு தீங்கு விளைவிப்பவை. எனவே, இவை அவர்கள் தவிர்க்க வேண்டிய உணவுகளாக உள்ளன. அல்லது முடிந்த அளவு குறைவாக இவற்றை உண்ணலாம்.

## நலத்திட்டங்கள்

## முளகுமூடு மறைவட்டம்

| இடம் | உதவி செய்தவர்கள் அன்பியம்/ஒருங்கிணையம் | நோக்கம் | உதவிப் பெற்றவர் கள் | உதவித் தொகை |
|---|---|---|---|---|
| முளகுமூடு | ஒருங்கிணையம் | நோய்வாய்ப்பட்டோர், வறுமையிலிருப்போர்,கல்வி உதவி | - | 14000 |
| கூட்டமாவு | புனித பவுல் அன்பியம் | மருத்துவ உதவி | 2 | 8000 |
| | புனித ஜோசப் வாள் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 1000 |
| முளவிளை | குழந்தை தெரசாள் அன்பியம் | ஏழை உதவி (9 மூடை சிமென்ட்) | 1 | 3150 |
| செம்பருத்தி விளை | புனித அல்போன்சாள் அன்பியம் | கல்வி உதவி | 1 | 2000 |
| | | மருத்துவ உதவி | 1 | 3000 |
| | குழந்தை இயேசுவின் தெரசாள் அன்பியம் | கல்வி உதவி | 1 | 5000 |
| | | மருத்துவ உதவி | 2 | 2200 |
| தக்கலை | எலியாசியார் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 2000 |
| மூலச்சல் | ஒருங்கிணையம் | நெய்யூர் மருத்துவமனை – புற்றுநோயாளிகளுக்கு (பிரட், பழம், டவ்வல், சாரி. சட்டை) | - | 16120 |

## காரங்காடு மறைவட்டம்

| இடம் | உதவி செய்தவர்கள் அன்பியம்/ஒருங்கிணையம் | நோக்கம் | உதவிப் பெற்றவர் கள் | உதவித் தொகை |
|---|---|---|---|---|
| கண்டன் விளை | புனித அசிசியார் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 1500 |
| கல்லுக்கூட்டம் | புனித சிறுமலர் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 1000 |
| முரசங்கோடு | தூய நாசரேத் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 1000 |
| | புனித லூர்து மாதா அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 2000 |
| | தூய பரலோக மாதா அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 2000 |
| | தூய ஆரோக்கிய மாதா அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 600 |

## திரித்துவபுரம் மறைவட்டம்

| இடம் | உதவி செய்தவர்கள் அன்பியம்/ஒருங்கிணையம் | நோக்கம் | உதவிப் பெற்றவர் கள் | உதவித் தொகை |
|---|---|---|---|---|
| மருதங்கோடு | தூய தேவசகாயம் அன்பியம் | ஏழை நல உதவி | 1 | 1500 |
| | புனித லூர்து அன்னை அன்பியம் | ஏழை நல உதவி | 1 | 2000 |
| | தூய அல்போன்சாள் அன்பியம் | ஏழை நல உதவி (ஆளுக்கு 300 வீதம்) | 7 | 2100 |
| | தூய பவுல் அன்பியம் | ஏழை நல உதவி | 1 | 9000 |
| | | மருத்துவ உதவி | 1 | 2500 |
| | தூய யோசேப்பு அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 500 |
| பாத்திமாபுரம் | 7 – ம் அன்பியம் | - | 1 | 2500 |
| சந்தணபுரம் | தூய தோமையார் அன்பியம் | ஏழை நல உதவி | 2 | 1000 |
| வெட்டுவெந்தி | ஒருங்கிணையம் | வயநாடு வெள்ள நிவாரண உதவி (42 திருவிவிலியம்) | | 31000 |
| | | மருத்துவ உதவி | 1 | 3500 |
| | | ஏழைகள் நல உதவி | 1 | 2500 |
| தோமையார்புரம் | தூய அல்போன்சாள் அன்பியம் | ஏழைகள் நல உதவி (மளிகைப் பொருட்கள்) | 4 | 3000 |
| சிலுவைபுரம் | 3 – ம் அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 1200 |
| | 1- ம் அன்பியம் | கத்திப்பாறை-ஸ்னேக பவன் (பொருட்கள்) | | 16150 |
| | 9-ம் அன்பியம் | நோயாளி | 1 | 500 |

## மாத்திரவிளை மறைவட்டம்

| இடம் | உதவி செய்தவர்கள் அன்பியம்/ஒருங்கிணையம் | நோக்கம் | உதவிப் பெற்றவர்கள் | உதவித் தொகை |
|---|---|---|---|---|
| கண்ணன்விளை | அமல அன்னை அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 2000 |
| | ஆரோக்கிய அன்னை அன்பியம் | புற்றுநோயாளி மருத்துவ உதவி | 1 | 1000 |
| | | ஆதரவற்ற நபர் | 1 | 2000 |
| | | தொலையாவட்டம் முதியோர் இல்லம் - புத்தாடைகள் உணவுப்பொருட்னள் பிறப்பொருட்கள் | | 2500<br>2500<br>1000 |

## வேங்கோடு மறைவட்டம்

| இடம் | உதவி செய்தவர்கள் அன்பியம்/ஒருங்கிணையம் | நோக்கம் | உதவிப் பெற்றவர்கள் | உதவித் தொகை |
|---|---|---|---|---|
| அன்னைநகர் | தூய சவேரியார் அன்பியம் | ஏழை நல உதவி | 1 | 2500 |
| காப்புக்காடு | 10 - வது அன்பியம் | புனித ஜார்ஜியார்-குடில்வீடு | | 4500 |
| | | மருத்துவ உதவி | 2 | 2000 |
| முஞ்சிறை | 1 - வது அன்பியம் | நோயாளி | 1 | 3000 |
| | 2 - வது அன்பியம் | முத்தோர் உதவி | 1 | 10000 |
| | | ஏழை உதவி (500 வீதம்) | 2 | 1000 |
| | | ஏழை உதவி | 1 | 1000 |
| | | ஏழை உதவி (புடவை) | 1 | 600 |
| | | ஏழை உதவி | 1 | 1200 |
| வாறுவிளை | 3 - வது அன்பியம் | பிற மதம் சார்ந்த உதவி | 1 | 10500 |
| காஞ்சாம்புறம் | - | தொயைாவட்டம் முதியோர் இல்லம் - பொருள் உதவி | | 10000 |

## புதிய நிர்வாகிகள்

### காரங்காடு மறைவட்டம்

**குழிவிளை**

துலைவர் : திருமதி. சரிதா
து. தலைவர் : திருமதி. மேரி ரெஜிலா
செயலர் : திருமதி. M. சிம்லா
து. செயலர் : திருமதி. மேரி ஷோபா
பொருளர் : திருமதி. ஆலன் சோபியா

### வேங்கோடு மறைவட்டம்

**வேப்புவிளை**

துலைவர் : திரு. அமலதாஸ்
து. தலைவர் : திருமதி. மரிய பூபதி
சேயலர் : திருமதி. அஜிதா
து. செயலர் : திருமதி. பிரபா
பொருளர் : திரு. ரமேஷ்

### புத்தன்கடை மறைவட்டம்

**பொன்மனை**

தலைவர் : திரு. லிபின் ஆன்றனி
து. தலைவர் : திரு. ஜெஸ்டின்
செயலர் : திருமதி. மேரி பியூலா
து. செயலர் : திருமதி. சுப்ரகலா
பொருளர் : திரு. லிவிங்ஸ்டன்

## பொதுக்காலம் 33 – ஆம் ஞாயிறு
## 17 நவம்பர் 2024

ஏழைகளின் வாயினின்று எழும் விண்ணப்பம் கடவுளின் செவிகளை எட்டும் (சீராக். 21 : 5)

**பாகம் I**

அன்புமிக்க சகோதர சகோதரிகளே

1. ஏழைகளின் வாயினின்று எழும் விண்ணப்பம் கடவுளின் செவிகளை எட்டும் (காண்க சீராக் 21:5). 2025 பொது யூபிலி ஆண்டின் முன்னோட்டமாய், இறைவேண்டலுக்கென அர்ப்பணிக்கப்பட்ட இந்த ஆண்டில், நவம்பர் 17 ஆம் தேதி நாம் கொண்டாடவிருக்கும் எட்டாம் உலக ஏழையர் நாளுக்கு மேற்கண்ட திருவிவிலிய அருள்வாக்கு மிகவும் பொருந்துவதாய் அமைகிறது. உண்மையில் நம் இறைவேண்டல் கடவுளின் திருமுன் சென்றடைகிறது என்ற உறுதிப்பாட்டைக் கிறிஸ்தவ நம்பிக்கை தழுவியுள்ளது. அது எந்த பிற விண்ணப்பத்தையும் குறிக்கவில்லை. ஏழையின் விண்ணப்பத்தையே குறிக்கிறது ! இந்த வார்த்தையை நாம் தியானித்து, அதனை நாம் அன்றாடம் எதிர்கொள்ளும் ஏழைகளின் முகங்களிலும் அவர்களுடைய கதைகளிலும் "வாசிப்போம்". இதன் வழியாய் அவர்களோடு ஒன்றிப்பு ஏற்படுத்துவதற்கும் அவர்களுடைய துன்பங்களில் தோள்கொடுப்பதற்கும் உரிய பாதையாய் இறைவேண்டல் அமையும்.

2. நாம் மேலே குறிப்பிட்டுள்ள சீராக் என்ற ஏடு போதிய அளவு அறியப்படவில்லை எனினும் அதன் கருத்தோட்டங்களுடைய ஆழத்திற்காக குறிப்பாக, மனித குலத்துக்கு கடவுளோடும், உலகோடும் உள்ள தொடர்பாக ஆய்ந்தறிய அது தகைமை வாய்ந்ததாகும். பென்சீரா என்ற அதன் ஆசிரியர் கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் எருசலேமில் வாழ்ந்ததாகக் கருதப்படும் ஓர் ஆசிரியரும் மறைநூல் அறிஞரும் ஆவார். ஆவர் ஓர் அறிவார்ந்த, இஸ்ராயேல் மரபில் தோன்றிய ஒரு மனிதர். வேலை, குடும்பம், சமூக வாழ்வு, இளையோரின் கல்வி போன்ற மனித வாழ்வின் பல்வேறு அம்சங்கள் பற்றிக் கற்பித்தவர். கடவுள் நம்பிக்கை, சட்ட நெறிகளைக் கடைபிடித்தல் போன்றவற்றுக்குத் தனிக்கவனம் செலுத்தினார். தன்னுரிமை (சுதந்திரம்), தீமையும் இறைநீதியும் போன்ற கடுஞ்சிக்கல்களுக்குத் தீர்வு கண்டார். அவை இன்றும் பெரிதும் பொருந்துபவையாகும். தூய ஆவியாரால் தூண்டப்பெற்று, பென்சீரா எல்லாருக்கும் கடவுள் முன்னிலையிலும் சகோதர சகோதரிகள் முன்பும் ஞானத்தோடும் மாண்போடும் வாழ்வதற்கான பாதை காட்ட முயன்றார்.

3. இந்த திருநூல் ஆசிரியர் பெரிய அளவில் கவனம் செலுத்தியுள்ள ஒரு கருத்து இறைவேண்டல் ஆகும். இவ்வளவு அர்ப்பணத்தோடு அவர் இதைச் செய்ய காரணம் தம்முடைய தனிப்பட்ட அனுபவங்களைப் பேச வைப்பதற்காகும். ஒவ்வொரு நாளும் கடவுளின் திருமுன் நின்று அவருடைய குரலுக்குச் செவி கொடுக்காத ஒருவரால் இறைவேண்டலைப்பற்றி இவ்வளவு ஆழமாகவும் பயனுறு வகையிலும் எழுத இயலாது. பென் சீரா தம் இளமைக்காலம் தொட்டே ஞானத்தைத் தேடியதாய் அறிக்கையிடுகிறார். "நான் இளைஞனாய் இருந்த போது, பயணம் மேற்கொள்ளுமுன் என்னுடைய வேண்டுதலில் வெளிப்படையாய் ஞானத்தை தேடினேன்" (சீராக் 51 : 13)

4. அவருடைய இந்தப் பயணத்தில் இறைவெளிப்பாட்டின் அடிப்படை உண்மைகளில் ஒன்றைக் கண்டறிந்தார். அது என்னவென்றால் ஏழைகளின் துன்பங்களைக் கண்டு "பொறுமை இழந்து", அவர்களுக்கு உடனே நீதி வழங்கும் அளவுக்குக் கடவுளின் இதயத்தில் ஏழைகளுக்குச் சார்பான ஓர் இடம் உள்ளது என்பதாகும். "தங்களைத் தாழ்த்துவோரின் வேண்டுதல் முகில்களை ஊடுருவிச் செல்லும், அது ஆண்டவரை அடையும் வரை அவர்கள் ஆறுதல் அடைவதில்லை. உன்னத இறைவன் சந்திக்க வரும் வரை அவர்கள் நற்பயிற்சியில் தளர்ச்சியடைவதில்லை. ஆவர் நீதிமான்களுக்குத் தீர்ப்பு வழங்குகிறார். தம் தீர்ப்பை செயல்படுத்துகிறார். ஆண்டவர் காலம் தாழ்த்தமாட்டார்" (சீராக் 35 : 17-19). கடவுள், அக்கறையோடு கவனிக்கிற ஒரு தந்தையாய் இருப்பதால் தம் பிள்ளைகளின் துன்பங்களை அவர் அறிகிறார். ஒரு தந்தை என்ற வகையில் அவர் ஏழையர், விளிம்பு நிலையில் உள்ளோர், துன்புறுவோர், மறக்கப்பட்டோர் போன்ற மிகத் தேவையில்

இருக்கிறவர்களைக் கவனிக்கிறார். அவருடைய இதயத்திலிருந்து யாரும் புறந்தள்ளப்படுவதில்லை. ஏனெனில் அவருடைய கண்களுக்கு நாம் ஏழைகளும் தேவையில் உள்ளவர்களுமாய் இருக்கிறோம். நாம் அனைவரும் இரவலர்களே. ஏனெனில், கடவுள் இன்றி நாம் ஒன்றுமில்லை. கடவுள் தரவில்லையென்றால் நம்மிடம் வாழ்வு இல்லை. அப்படியிருந்தும் அடிக்கடி நாமே நம் வாழ்வின் உரிமையாளர்கள்போல் வாழ்கிறோமே ! அல்லது நாம் வாழ்வின் மேல் வெற்றி கொள்ள முயல்கிறோமே ! இந்த உலக சிந்தனைப்போக்கு எந்த விலைக் கொடுத்தேனும் நாம் நம்மை நிலைநாட்டிக்கொள்ள வேண்டும் என்றும் சமூக விதிகளை மீறியேனும் செல்வத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்றும் நம்மைத் தூண்டுகிறது. இது எத்தகைய ஒரு மாயத்தோற்றம் ! அடுத்தவர்களுடைய மாண்பைத் தரையிலிட்டு மிதிப்பதன் வழியாக நாம் மகிழ்வைக் கண்டடைய இயலாது. போர்கள் கட்டவிழ்த்துவிடும் வன்முறை மனிதர் முன் தங்களை வலுவுள்ளவர்கள் எனக் கருதுகிறவர்களுடைய ஆணவத்தைத் தெளிவாகக் காட்டுகிறது. ஆனால் கடவுளின் கண்களுக்கு அவர்கள் ஒன்றுமில்லாதவர்கள். ஆயுதங்களை ஈடுபடுத்தும் தவறான கோட்பாடுகளால் ஏழ்மையாக்கப்பட்டுள்ள மக்கள் எத்தனை எத்தனையோ ! இந்த உண்மை நிலைக்கு நம் முதுகைக் காட்ட இயலாது. இந்தச் சின்னஞ்சிறியவர்களுள் ஒவ்வொருவரும் இறைமகனின் சாயலைத் தாங்கியுள்ளவர் என்பதும் நம் துணையும் கிறிஸ்தவ அன்பின் செயல்பாடும் தேவைப்படுகிறவர் என்பதும் ஆண்டவரின் சீடர்களுக்குத் தெரிந்ததே. "ஏழையரை சமூகத்தின் அங்கமாய் ஆற்றல்படுத்தவும் அவர்களுடைய விடுதலைக்கும் மேம்பாட்டுக்கும் கடவுளின் கருவியாகச் செயல்படவும் ஒவ்வொரு தனிப்பட்ட கிறிஸ்தவரும் ஒவ்வொரு கிறிஸ்தவ சமூகமும் அழைக்கப்படுகிறது. ஏழையரின் அழுகுரலைக் கேட்டு நாம் அவர்களின் துணைக்கு வருமளவுக்கு இளகிய மனமும் கவனமும் நமக்குத் தேவைப்படுகின்றன" (நற்செய்தியின் மகிழ்ச்சி. எண் 187)

### பாகம் 2

5. இறைவேண்டலுக்காய் அர்ப்பணிக்கப்பட்ட இந்த ஆண்டில் ஏழையரின் இறைவேண்டலை நம் இறைவேண்டலாய் அமைக்கவும் அவர்களோடு இணைந்து இறைவேண்டல் செய்யவும் வேண்டியுள்ளது. இது நாம் கரம் விரித்து எதிர்கொள்ள வேண்டிய ஒரு சவாலும் பேணி வளர்க்கப்பட வேண்டிய ஒரு மேய்ப்புப் பணியும் ஆகும். மேலும் "அருள்வாழ்வுக்கான போதிய கவனம் கிடைக்காமலிருத்தல் ஏழையர் எதிர்கொள்ளும் மிகவும் மோசமான பாகுபாடு ஆகும். பெரும்பான்மையான ஏழையரிடம் இறைநம்பிக்கைக்குச் சிறப்பான திறந்த மனம் உள்ளதால் அவர்களுக்குக் கடவுள் தேவைப்படுகிறார். அவருடைய நட்புறவையும், ஆசியையும், அருள் வாக்கையும், அருளடையாளங்களின் கொண்டாட்டத்தையும் அவற்றுடன் இறைநம்பிக்கையில் வளர்ச்சி, முதிர்ச்சி ஆகியவற்றையும் வழங்க நாம் தவறிவிடலாகாது. ஏழைகளுக்கான நம் விருப்பத் தேர்வாய் உருவெடுக்க வேண்டும்" (நற்செய்தியின் மகிழ்ச்சி எண். 200).

இதற்கெல்லாம் பணிவான ஓர் இதயம் வேண்டும். தம்மை இரவலாக்கும் அளவுக்குத் துணிவுள்ள, தம்மை ஏழை என்றும், தேவையிலுள்ளவர் என்றும் அறிக்கையிடத் தயாரான ஓர் இதயம் வேண்டும்,. ஏழ்மை, பணிவு. நம்பிக்கை ஆகியவற்றிடையே நெருங்கிய ஒரு தொடர்பு உள்ளது. உண்மையில் எளிய மனிதரிடம் பணிவு இருக்கும். தூய ஆயர் அகஸ்தினார் சொன்னது போல் "தற்பெருமை பாராட்ட ஏழையிடம் எதுவும் இல்லை, செல்வந்தர்கள் தங்களுடைய செருக்கை எதிர்த்துப் போராட வேண்டும். ஆகவே நான் சொல்வதைக் கேளுங்கள். உண்மையில் ஏழையாய் இருங்கள், நற்பண்புகளைக் கொண்டிருங்கள். பணிவுள்ளவர்களாயும் இருங்கள்" (மறையுரைகள் 4.4). பணிவுள்ளவர்களிடம் பெருமை பாராட்டுவதற்கும் உரிமை கோருவதற்கும் எதுவும் இல்லை. தங்களையே நம்பிச் சார்ந்திருக்க அவர்களால் இயலாது. மாறாக, மனம் மாறித் தந்தையிடம் திரும்பி வந்து அவருடைய அரவணைப்பைப் பெற்ற காணாமற்போன மகன்போல் (காண்க. லூக்கா 15 : 11-24) கடவுள் முன் நின்று, கடவுளின் பரிவான அன்புக்காகத் தங்கள் விண்ணப்பங்களை வைக்க இயலும். சார்ந்திருக்க வேறு எதுவும் இல்லாத நிலையில், ஏழைகள் கடவுளிடமிருந்து ஆற்றல் பெறுகிறார்கள். கடவுளிடமே தங்கள் முழு நம்பிக்கையையும் வைக்கிறார்கள். கடவுள் நம்மை என்றும் கைவிடார். நம் வேண்டல்களுக்குப் பணிவு உண்மையாகவே நம்மில் ஊற்றெடுக்கச் செய்கிறது.

6. நம் நகரங்களில் வாழும் நம் சமூகத்தின் அங்கமான ஏழைகளுக்கு நான் சொல்வது, இந்த உறுதிப்பாட்டை இழந்துவிடாதீர்கள் ! கடவுள் உங்களை ஊன்றிக்கவனிக்கிறார். ஆவர் உங்கள் அருகிலேயே உள்ளார். உங்களை அவர் மறந்துவிடுவதில்லை. அவ்வாறு மறக்கவும் அவரால் இயலாது. நம் இறைவேண்டல்களுக்குப் பதில் கிடைக்கவில்லையோ என்று உணர்ந்த அனுபவங்கள் நம் எல்லாருக்கும் உள்ளன. சில நேரங்களில் நாம் எதிர்கொள்ளும், நம்மை அவமானப்படுத்தும் கொடும் துன்பத்திலிருந்து மீள வேண்டும் என வேண்டியிருக்கலாம். அந்த நேரத்தில் கடவுள் நம் அழுகைக் குரலைக் கேட்காதது போல் தோன்றியிருக்கலாம். என்ன இருந்தாலும் கடவுளுடைய மௌனத்தின் பொருள் கடவுள் நம் துன்பங்களைக் கண்டுகொள்ளவில்லை என்பதல்ல, மாறாக அதிலும் நாம் நம்பிக்கையோடு செவிசாய்க்க வேண்டிய, அரவருக்கும் அவருடைய திருவுளத்துக்கும் அடிபணிய நம்மை அழைக்கும் அவருடைய சொல் ஒன்று உள்ளது. இந்த இடத்திலும் சீராக் ஓர் உறுதி தருகிறார். கடவுளின் நீதித் தீர்ப்பு ஏழைக்குச் சார்பானதாகவே இருக்கும் (காண்க. சீராக் 21:5)ஆகவே ஏழ்மையிலிருந்து மிகவும் உன்னதமான எதிர்நோக்குத் துடித்தெழ இயலும். “நம் அகவாழ்வு தன்னுடைய விருப்பு வெறுப்புகள், அக்கறைகள் ஆகியவற்றிலேயே முடங்கும் போது அங்கு வேறு யாருக்கும், குறிப்பாய் ஏழையருக்கு, இடம் இராது. கடவுளிகன் குரல் கேட்கப்படாது, அவருடைய அன்பு நல்கும் அமைதியான மகிழ்வு உணரப்படாது. நல்லது செய்ய வேண்டும் என்ற ஆர்வமும் மங்கிவிடுகிறது” (நற்செய்தியின் மகிழ்ச்சி எண். 2) என்பதை எப்போதும் நினைவில் கொண்டிருப்போம்.

**குழித்துறை மாவட்ட அன்பிய மாநாடு**

நாள் : 25.01.2025

இடம் : குழந்தை இயேசு மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளி, உண்ணாமலைக்கடை

பங்கேற்போர் : அன்பிய நிர்வாகிகள் 5 பேரும்

மாநாடு சந்தா : ஒரு அன்பியத்திற்கு ரூ. 100/- மட்டும்

**ஞாயிறு வழிபாடு தயாரிப்போம்**

| வாரம் | நாள் | முதல் வாசகம் | இரண்டாம் வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | 03.11.2024 | இ.ச. 6 : 2-6 | எபி. 7:23-28 | மாற். 12 : 28b-34 |
| 2 | 10.11.2024 | 1 அர. 17: 10-16 | எபி. 9 : 24-23 | மாற். 12 : 38-44 |
| 3 | 17.11.2024 | தானி. 12 : 1-3 | எபி. 10 :11-14,18 | மாற். 13 : 24-32 |
| 4 | 24.11.2024 | தானி. 7 : 13-14 | தி.வெ. 1 : 5-8 | யோவா. 18 : 33-37 |

*அடித்தளம் விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.*

தொடர்புக்கு ...

9487110298, 8870513177

*அன்பிய இயக்குநர்*

அன்பிய பணிக்குழு, ஆயர் இல்ல வளாகம்,
உண்ணாமலைக்கடை - 629 179

மறைமாவட்ட அன்பிய பணிக்குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி



மாத்திரவிளை மறைவட்ட மாநாடு



மாத்திரவிளை மறைவட்ட மாநாடு



மறைமாவட்ட அன்பிய பணிக்குழு உறுப்பினர்களுக்கான பயிற்சி



புத்தன்கடை மறைவட்ட கூட்டம்



காரங்காடு மறைவட்ட பொதுக்குழு கூட்டம்



காரங்காடு மறைவட்ட செயற்குழு கூட்டம்



முளகுமூடு மறைவட்ட பொதுக்குழு உறுப்பினருக்கான மனமகிழ் விளையாட்டு



மாதாபுரம் ஒருங்கிணையம் சந்திப்பு



திரித்துவபுர மறைவட்ட பொதுக்குழு கூட்டம்






Divine Healing

குழித்துறை மறைமாவட்டத்தி

குணமளிக்கும் பணி

St. XAVIER'S HOSPITAL

SXH

HUMAN TOUCH - DIVINE HEALING

# புனித சவேரியார் பல்நோக்கு மருத்துவமனை

## சுங்கான்கடை,

## தொடர்புக்கு :04651 231181

- பொது மருத்துவம் மற்றும் சர்க்கரைநோய் மருத்துவம்
- மூளை மற்றும் வலிப்பு,பக்கவாத நோய் மருத்துவம்
- இதய கோளாறு,மாரடைப்பு மற்றும் இதய நோய் மருத்துவம்
- சிறுநீரகவியல் மருத்துவம்
- புற்றுநோய் மருத்துவம்
- எலும்பியல் மற்றும் எலும்பு முறிவு மருத்துவம்.
- பொது அறுவைசிகிட்சைகள்(Appendix, Hernia, Diabetic Foot Ulcer,Cyst)
- குழந்தைகள் மருத்துவம்.
- காது,மூக்கு,தொண்டை மருத்துவம்(ENT)
- ஆஸ்துமா,அலர்ஜி மற்றும் நுரையீரல் மருத்துவம்
- சோரியாசிஸ் மற்றும் தோல் நோய் மருத்துவம்.

**24 மணி நேர மருத்துவ சேவை**

**ICU/Operation Theatre**

**Ambulance வசதி உள்ளது.**

**Radiology (X-Ray,Ultrasound) வசதி.**

**24 மணி நேர Lab/Pharmacy வசதி.**

**குறைந்த கட்டண அறைகள்**

**அனுபவம் நிறைந்த மருத்துவர்கள்**

**குறைந்த கட்டணத்தில் சிறந்த சிகிட்சை.**

மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமைகளில் காலை முதல் மதியம் வரை பொது மருத்துவ முகாம். மருத்துவ ஆலோசனை முற்றிலும் இலவசம். மருத்துகளில் சிறப்பு சலுகைகள் வழங்கப்படும்.